செ.வெ.எண்.154 நாள்.09.03.2018.

திருநெல்வேலி தாமிரபரணி ஆற்றங்கரை பகுதிகளை ஜேசிபி இயந்திரங்கள் மூலம் சீமை கருவேலம் மற்றும் புதர்களை அகற்றும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.

--------

திருநெல்வேலி தாமிரபரணி ஆற்றங்கரை பகுதிகளை தூய்மைப்படுத்தும் பணிகள் மூன்றாம் கட்டமாக இன்று (09.03.2018) மற்றும் நாளை (10.03.2018) நடைபெறுகிறது. இன்று பாபநாசம் முதல் சீவலப்பேரி வரை சுமார் 72 கி.மீ தூரத்திற்கு 68 இடங்களில் ஜேசிபி மற்றும் கிட்டாட்சி இயந்திரங்கள் மூலம் சீமை கருவேலம் மற்றும் புதர்களை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளில் 79 ஜேசிபி இயந்திரங்களும், 15 கிட்டாட்சி இயந்திரங்களும் பயன்படுத்தப்படுகிறது. இன்று காலை முதல் மாலை வரை இயந்திரங்கள் மூலமான பணிகள் நடைபெறும். (நாளை ) 10.03.2018 காலை 42 கல்லூரிகளின் சுமார் 7200 மாணவ, மாணவிகள் தாமிரபரணி ஆற்றங்கரை பகுதியில் 68 இடங்களில் தூய்மைப்படுத்தும் பணிகளில் ஈடுபடவுள்ளனர். மேலும், பல்வேறு தொண்டு நிறுவனங்கள், அரசு பணியாளர்களின் சங்கங்கள், தன்னார்வர்களும் இப்பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

இன்று, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே உள்ள தாமிரபரணி ஆற்றங்கரை பகுதியில் இயந்திரங்கள் மூலம் சீமை கருவேலம் மற்றும் முட்புதர்களை அகற்றும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.கந்தசாமி, மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் திரு.சிவகுமார், கலால் வட்டாட்சியர் திரு.பால்ராஜ், கனிம வளத்துறை துணை வட்டாட்சியர் திரு.இசக்கிபாண்டி, மண்டல துணை வட்டாட்சியர் திரு.ஆவுடைநாயகம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.